


மும்பையில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழாவில் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் கலந்து கொண்டார்கள் . வீரமணி அவர்களுக்கு மும்பை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பொறுப்பாளர் அலி ஷேக் மீரான் ,பொறுப்பு குழு உறுப்பினர்கள் ஜேம்ஸ்,வசந்தகுமார்,இளங்கோ,வதிலை பிரதாபன்,ஜெயின் ஆப்தீன், மெஹபூப்,பாபு,சிவகுமார்,முஸ்டாக் பாய் மற்றும் தோழர்கள் பூங்கொத்து நினைவுப் பரிசு அளித்து சிறப்பித்தனர்.



கடலூர், மஞ்சக்குப்பம் மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் அரசுப் பொருட்காட்சியினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (03.01.2026) தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணிய கோட்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் திருமதி ர.அ.பிரியங்கா செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் கு.தமிழ்செல்வராஜன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.கொ.நாகராஜபூபதி உட்பட பலர் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் திமுகவும் தேர்தல் களமும் பயிற்சி பாசறை அறிமுக கூட்டம், சார்பு அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களிடம் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். அமைச்சர் சி.வி.கணேசன் , சபா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர் பா.துரைசாமி, உள்ளிட்ட,கழக நிர்வாகிகள் நெய்வேலி சட்டமன்ற தொகுதி சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்!

# முதல்வர் வழங்கிடும் தித்திக்கும் தேன்!

## திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர்

## பேராசிரியர் தேன்மொழி பொன். முத்து ராமலிங்கம் அறிக்கை!

சென்னை, ஜன.5-

“தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத்திட்டம் முதல்வர் வழங்கிடும் தித்திக்கும் தேன்” என்று திராவிடக் கருத்தியல் ஆசிரியர் மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தேன்மொழி பொன். முத்துராமலிங்கம் கூறியுள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் பெரும்பங்காற்றி வரும் அரசு ஊழியர்கள், வருங்காலத் தமிழகத்திற்கு வளமான தலைமுறைகளை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களின் கால் நூற்றாண்டுக் கனவான ஓய்வூதியத்தை அறிவித்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உள்ளங்களில் வரும் பொங்கலுக்கு முன்பே மகிழ்ச்சியை வரவழைத்துள்ளார் போற்றுதலுக்குரிய தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் வழித்தடத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு எப்பொழுதும் செயல்படும் இந்த திராவிட மாடல் அரசு என்பதை மீண்டும் அழுத்தமாக பதிவு செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

ஒவ்வொரு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வருங்காலத்தில் சுய மரியாதையோடு இச்சமூகத்தில் வாழ்வதற்கு ஆகச்சிறந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் திரா விடத்தின் முக்கிய மூன்று முத்தான கொள்கை அடித்தளங்களான “பகுத்தறிவு, சமூகநீதி, சுயமரியாதை” ஆகியவை இச்சமுகத்தின் ஆணிவேராக இருக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடு தான் முதலமைச்சரின் போற்றுதலுக்குரிய அறிவிப்பாகும்.

திராவிட மாடல் அரசு உறுதியளித்துள்ள இந்த உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் தொடர்புடைய ஒவ்வொருவரின் வாழ்விலும் தன்னம்பிக்கை, சுயமரியாதை, மகிழ்ச்சி ஆகிய இனிய சூழலை உருவாக்கியுள்ளது என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் எதிர் கால வாழ்க்கையில் மகிழ்ச் சிகரமான சூழலை இந்த அறிவிப்பின் மூலம் உருவாக்கிதந்த தமிழ்நாடு அரசின் போற்றுதலுக்குறிய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி, அறிவிப்பு!

வேலூர், ஜன.5-

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் கதிர் ஆனந்த் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (05.01.2026-திங்கள் கிழமை) பகல் 12.00 மணியளவில் காட்பாடி எஸ்.ஏ. மஹால், ஆக்ஸிலியம் கல்லூரி, ரவுண்டானாஅருகில் நடைபெறவுள்ளது. மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன் அவர்கள் தலைமையில் கீழ்கண்டபொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, வடக்குமாவட்டதி.மு.கவிற்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற, உறுப்பினர்கள், மாவட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:

1.சிறப்பு வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல்,நீக்கல் மற்றும் திருத்தம் முகாம் நிறைவடைவதுசம்மந்தமாக.

2.தமிழ்நாடு தலைகுனியாதது“என் வாக்குச்வாடி வெற்றிவாக்குச்சாவடி”பரப்புரை கூட்டம்வரும் 09.01.2026 தேதிக்குள்ளாக அனைத்து ஒன்றியம், பகுதி, பேரூர்களில் நடத்திமுடிப்பது சம்மந்தமாக.

3.அரசு ஊழியர்களின் 26 ஆண்டு கால கனவான ஓய்வுதியத் திட்டத்தை அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தல்.

4. கழக துணைப் பொதுச் செயலாளர், பாராளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமையில் அமைக்கப்பட்ட தி.மு.கதேர்தல் அறிக்கை குழு வேலூர் வடக்கு மாவட்டத்திற்கு வருகை தருவது குறித்து மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் அறிக்கை தயாரித்து வழங்குதல் குறித்து.

5. கழகஆக்கப்பணிகள்.

இவ்வாறு கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்

# விழுப்புரம் வடக்கில் விளையாட்டுப் போட்டிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்

செஞ்சி, ஜன.5-

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகசுற்றுச்சூழல் அணிசார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு வல்லம் ஒன்றியம் களையூர் ஊராட்சியில் இளைஞர்களுக்கு கபடி போட்டிகள் நடைபெற்றன.

கபடி போட்டியில்களையூர், வல்லம், மேல் ஒலக்கூர்,மேல் களவாய், கப்பை, கடம்பூர், நாட்டார் மங்களம்,மணியம்பட்டு மேல் சித்தாமூர், செஞ்சி, தென்புத்தூர், கல்லாங்குப்பம் உள்ளிட்ட 24 அணிகள் கபடி போட்டியில் பங்கேற்று விளையாடினர்.

இதில் கல்லாங்குப்பத்தைச் சேர்ந்த மேன்பவர் அணியினர் முதலிடத்தையும், தென்புத்தூர்அணியினர் இரண்டாவது இடத்தையும், கலையூர் மற்றும் ஆலகிராமம்கிராமத்தைச் சேர்ந்த அணியினர்மூன்று மற்றும் நான்காவது இடத்தை பிடித்தனர்.

கபடி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றி கோப்பை மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்ச்சி களையூர் ஊராட்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குவல்லம் மத்தியஒன்றிய செயலாளர் இளம்வழுதி தலைமை தாங்கினார்.ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார்.

மயிலம் சட்டமன்றத் தொகுதி சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் கார்வண்ணன்ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு முதலிடம் பிடித்தகல்லாங்குப்பம் மேன் பவர் அணிக்கு ரூபாய் 10 ஆயிரத்துடன் வெற்றி கோப்பையையும், தென்புத்தூர் அணிக்கு 5 ஆயிரம் ரூபாயும் ,களையூர், ஆலகிராமம் ஆகிய அணிகளுக்கு தலா 2000 ரூபாயை வழங்கி சிறப்புரையாற்றினார்

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை, ஒன்றிய நிர்வாகிகள்

பாண்டியன், லட்சுமி லட்சுமணன், பத்மநாபன், கதிரவன், அமைப்புசாரா தொழிலாளர் நல அணிஅமைப்பாளர் தமிழரசன், கிளைக் கழக செயலாளர்

கண்ணையன், ராஜேந்திரன், தக்ஷிணாமூர்த்தி, குமார், பாலு, வெங்கட்,சரவணன்

அன்பரசன், விக்னேஷ், முருகன், புவியரசன், பிரசாந்த், முகுந்தன், கவியரசன், கணேஷ், பிரதாப், செல்வா, நவீன், பூவரசன், தேவராஜ், மோகன், பழனி, ராஜீவ்காந்தி உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

# திருப்போரூரில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

திருப்போரூர், ஜன. 5 -

திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி திருப்போரூர் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக செயலாளர்பையனூர்எம்.சேகர் தலைமையில் பாகம் எண் 189க்கு உட்பட்ட தண்டரை ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில்தொகுதிபார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில்பாகஒருங்கிணைப்பாளர்ஒ.ஜே.மதுரைவேல் மாவட்ட கவுன்சிலர் டி.ஜெயச்சந்திரன், திருமலை, ராமகிருஷ்ணன், ஜி.கோபிநாத்,கே.செல்வம், பாஸ்கர், லோகநாதன், சசிகலா, ரேவதி, நெல்சன், சின்னையா, ஜெயச்சந்திரன், ஏழுமலை, செல்வராஜ், வெங்கடேசன், துரை, கண்ணன், சுந்தர், குமார், கே. துரை,கடம்பாடிலிங்கேஸ், கோபால், சந்திரா, உஷா, கலைச்செல்வி, வசந்தி, சுந்தரி, லோகேஸ்வரன், நந்தகோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமானமகளிர்கலந்துகொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டைசட்டமன்றஉறுப்பினருமான க.தேவராஜிபல்வேறுஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ., டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், ஜெ. சர்மிளா, கே.பி.ஆர்.ஜோதிராஜன், டேம் வெங்கடேசன், நூருல்லா, என்.கே.ஆர்.சூரியகுமார் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி. சிட்டிபாபு
### சனவரி 5 (1977)



**தியாக மறவன் – கொள்கைக் குன்று – அண்ணா பெரும்படையின் அருந்தொண்டன் – தலைவர் கலைஞர் உடன் நின்று கழகப் பணியாற்றிய தோழன்.**

**சென்னை மாநகராட்சியின் மேயர், இருமுறை மக்களவை உறுப்பினர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், ‘கழகக்குரல்’ ஆசிரியர் உள்ளிட்ட பொறுப்புகளையேற்று சிறப்பாகப் பணியாற்றியவர்.**


**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்புக்குப் பாத்திரமானவராகத் திகழ்ந்தார்.**

**நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக இருந்தபோது சிறைக் காவலர்கள் தாக்கியதில் படுகாயமுற்று மரணமடைந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நத்தம் அ. இராசாமணி
### சனவரி 5 (2016)



**திராவிடர் கழகத்தில் தனது 14வது வயதில் சேர்ந்து, அதன்பின்னர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோருடன் பழகும் வாய்ப்பைப் பெற்று நத்தம் ஒன்றியக் கழகத் துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**